முதலமைச்சர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே சட்டப்படி நடந்துகொண்டிருப்பதால், அது குறித்துக் கண்டனம் எழுப்ப வேண்டிய பிரச்சினையே எழவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினக்கள் 180, 181, 182, 183 ஒத்திப்போடப்படுகின்றன. வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

ஈரோட்டிலுள்ள அண்ணா நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974-75 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு நிர்வாக அறிக்கைப் பிரதிகள் எறிக்கப்பட்டன என்றும் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி தவறான செய்தி தந்ததாகக் குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அறிவழகன், ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினைக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவை விதி 157-ன் கீழ் இந்த உரிமைப் பிரச்சினையை நான் எழுப்ப அனுமதியைக் கோருகிறேன்.

1978-79 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் 28—2—1978 அன்று பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், பெரியார், அண்ணா நினைவாலயத்தைப்பற்றி கீழ்க் கண்டவாறு கூறினார்:—

"அதற்கு வேலைக்கு எங்கேயிருந்து ஆள் வருகிறார் தெரியுமா? பாலக் கோட்டிலிருந்து வருகிறார். 1—1—1978-ல் வருகிறார். 2—1—1978 அவருக்கு வேலை அங்கே கொடுக்கப்படுகிறது. அவருடைய பெயர் விஜயன். கிச்சாமியின் மகன். எழாவது படித்தவர். அவருடைய மதர்டங் மலையாளம்.

மீண்டும் மாண்புமிகு செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் பேச்சில் குறுக்கிட்டு பதில் அளிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஈரோட்டிலுள்ள அண்ணா நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974–75 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிர்வாக அறிக்கைப் பிரதிகள் எறிக்கப்பட்டன என்றும் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி தவறான செய்தி தந்ததாகக் குற்றச்சாட்டு குறித்து

1978 மார்ச் 17] [திரு. க. அறிவழகன்]

“அவர் வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யவில்லை. விஜயன் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை. தமிழ்நாட்டில் அவர் வாழவில்லை. ஜனவரி 1ந் தேதி தமிழகத்தில் வருகிறார். எழாவது வகுப்பு படித்திருக்கிறார். எம்பளாய்மெண்ட் எக்சேன்ஜ் மூலமாக இல்லாவிட்டாலும் உங்கள் ஆட்சியின் மூலம் வேலை கொடுக்கப்படுகிறது என்பது இன்றைக்கு குற்றச்சாட்டு ஆகும். இப்படி ஈரோட்டில் வேலை கொடுத்திருக்கிறார்கள் இதுதான் குற்றச்சாட்டு”.

மீண்டும் 1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு நிர்வாக அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்.

“தமிழ்நாடு அட்மினிஸ்டிரேட்டிவ் ரிப்போர்ட் 1974-75 அரசு 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி அச்சிடப்பட்டது. நம்முடைய தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அதிலே முன்னுரையை எழுதியிருக்கிறார்கள். இவ்வளவு அழகான புத்தகத்தை என்ன செய்திருக்கிறார்கள் என்றால், முக்கியமான இடங்களில் வைத்துவிட்டு மீதியை எறித்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளைப் பற்றி தலைமைச் செயலாளர் அதிலே எழுதியிருக்கிறார்கள். அதையே கொளுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதைவிட இந்த ஆட்சியில் பயங்கரமான நிர்வாகச் சீர்கேடு வேறு என்ன இருக்க முடியுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்” என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

இந்த மாண்புமிகு அவையின் முன்னால் 15—3—1978 அன்று நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் ஒரு விளக்கம் அளித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன கருத்துக்களில் உண்மை எதுவுமில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்து திரு. வீராசாமி அவர்கள் அவையில் பேசும்போது வேண்டுமென்றே இந்த அவையைத் திசை திருப்பும் வகையில் உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டிருக்கிறார் என்பது விளங்குகிறது. இது அவையின் உரிமையை மீறுகிற வகையில் இருப்பதால் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

248 ஈரோட்டிலுள்ள அண்ணா நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974-75 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிர்வாக அறிக்கைப் பிரதிகள் எறிக்கப்பட்டன என்றும் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி தவறான செய்தி தந்ததாகக் குற்றச்சாட்டு குறித்து

[1978 மார்ச் 17

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு அனுப்பி அவருடைய விளக்கத்தைப் பெற்ற பின்னர் என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிடலாம் என்று நானே மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் முடிவு செய்ய வேண்டியது அது.

3. கவன ஈர்ப்பு.

கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத் தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கைக் களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கை களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்ததும் அதனால் அப்பகுதி கைத்தறி நெசவாளர்கள் படும் இன்னல் குறித்தும்."

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சத்திரப்பட்டி பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் அனைத்துக் கட்சி ஆதரவில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் ஊர்வலமாகச் சென்று இராஜபாளையம் வட்டாட்சியரிடம் 15 கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவை சமர்ப்பித்தார்கள். அதில் முதல் ஐந்து கோரிக்கைகளில் கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் வகைத் துணிகள் விசைத் தறியில் உற்பத்தி செய்யக்